

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.12.2025) முகாம் அலுவலகத்தில், கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளிட்டோர் உடனுள்ளார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.12.2025) முகாம் அலுவலகத்தில், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில இணைச் செயலாளர் வழக்கறிஞர் சி.ஜெரால்டு குடும்பத்தினருடன் கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளிட்டோர் உடனுள்ளார்கள்.

## விளையாட்டில் சிறப்பெய்திய வீரர்கள்,

# ‘திராவிட மாடல்’ ஆட்சி சாதனைகள் குறித்து வெளியிடும் வியப்பு!

சென்னை, டிச. 27 -

‘வைப் வித் எம்.கே.எஸ்’ என்ற பெயரில் இளம் விளையாட்டு வீரர் வீராங்கனைகளுடன் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலகலப்பாகக் கலந்துரை யாடினார்

**‘வைப் வித் எம்.கே.எஸ்’**

தமிழ்நாட்டின் இளம் விளை யாட்டு வீரர்வீராங்கனைகளுடன் ‘வைப் வித் எம்.கே.எஸ்.’ என்ற பெயரில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து ரையாடல் நிகழ்வைத் தொடங்கி உள்ளார்.



இந்தக் கலந்துரையாடலின் முதல் நிகழ்வை சமூக வலை தளத்தில் முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தி னம் வெளியிட்டார்.

அதன் விவரம் வருமாறு:

**வாள்வீச்சு வீராங்கனை கனகலட் சுமி:** உங்களுக்கு. பிடித்த விளை யாட்டு வீரர் யார்?

**முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்:** கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில் கபில் தேவ்வை எனக்கு ரொம்ப பிடிக்கும். ஏனென்றால் அவர் சாதா ரண குடும்பத்தில் பிறந்து படிப்படி யாகவளர்ந்து முன்னுக்கு வந்தவர். இந்தியாவுக்கு முதல் உலகக்கோப் பையை வாங்கிக் கொடுத்த கேப்டன் அவர். கவாஸ்கர், டெண் டுல்கர், டோனி ஆகியோரையும் பிடிக்கும்.

**குத்துச்சண்டை வீராங்கனை கலைவாணி:** நீங்கள் விளையாடிய முதல் விளையாட்டு எது ?

**பதில்:** எம்.சி.சி. பள்ளியில் படித்த போது ஆக்கி அணியில் இருந்தேன். ஆக்கியும் பிடிக்கும். கிரிக்கெட்டும் பிடிக்கும்.

**சரத்கமல்:** (டேபிள் டென்னிஸ் முன்னாள் வீரர்) அமைதி, பொறு மையுடன் செயல்படும் பாங்கு என உங்களுடன் டோனியை ஒப்பிட லாமா?.

**பதில்:** ஒப்பிட முடியாது. ஆனால் அவர் மாதிரி முயற்சி செய்யலாம்.

**நீச்சல் வீராங்கனை ஸ்ரீநிதி நடே சன்:**தமிழ்நாடு விளையாட்டுத்துறை அடுத்த 10 ஆண்டு காலத்தில் எந்த நிலை யில் இருக்கும்?

**பதில்:** இந்த ஆட்சியில் விளை யாட்டுத்துறை சிறப்பாக வந்து கொண்டிருக்கிறது. இது தொடர வேண்டும். தொடரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக் கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

கேரம் வீராங்கனை காசிமா, பாரா துப்பாக்கி சுடுதல் வீரர் ஆதித்யா கிரி, பாரா தடகள் வீரர் மனோஜ் உள்ளிட்டோர் தமிழக அரசு விளையாட்டு மேம்பாட்டுக்குச் செய்யும் திட்டங்களை பாராட்டி நன்றி தெரிவித்துப் பேசினார்கள்.

**முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பகிர்ந்த சுவாரசியத் தக வல்கள்:** முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம், ‘கிரிக்கெட் வீரர் டோனியிடம் உங்களுக்கு பிடித்த விஷயம் என்ன? என்று பாரா பேட்மிண்டன் வீராங்கனை ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்கு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அளித்த சுவாரசிய பதில் வருமாறு:





நான் பள்ளியில் படித்துக்கொண் டிருந்தபோது தெருவில் கிரிக்கெட் விளையாடி இருக்கிறேன். எனது தந்தையும் எங்களுடன் விளையாடி இருக்கிறார். நான் பவுலர். ‘ஆப் ஸ்பின்’ நன்றாகப் போடுவேன். நான் தலைவருக்கு பவுலிங் போட்டு இருக்கிறேன். சேப்பாக்கம் மைதா னத்தில் சினிமா நடிகர்கள் விளை யாடிய கிரிக்கெட் போட்டியிலும் நான் விளையாடி இருக்கிறேன். நான் 3 விக்கெட் எடுத்தேன்.

டி.ராஜேந்திரனின் மகன் நடிகர் சிலம்பரசன் எனது எதிரணி. அவரு டைய விக்கெட், நெப்போலியன் விக்கெட், இன்னொரு விக்கெட் ஞாபகம் இல்லை.

டோனி சிரித்தபடி, அழகாக, அமைதியாக எந்தவித பதற்றமும் இல்லாமல் அவரது கேப்டன்ஷிப் ஸ்டைல் எனக்குப் பிடிக்கும். அவர் பெரிய வழிகாட்டியாக இருக்கிறார். அவருக்கு வயதானாலும் இன்னும் விளையாட வேண்டும் என்று ரசி கர்கள் ஆர்வத்துடன் காத் திருப்ப தற்கு அதுதான் காரணம்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் கூறினார்.



100 நாள் வேலை திட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்த ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து கிருஷ்ணகிரி வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் சாவித்திரி, நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி ஒன்றியச் செயலாளர் தனசேகர், பொதுக்குழு உறுப்பினர் சித்ரா சந்தாசேகர் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் 100 நாள் வேலை திட்ட பயனாளிகள் பெண்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

# தன்னலம் கருதா உழைப்புக்கு வாழும் சாட்சி, ஐயா நல்லகண்ணு!

## 101வது பிறந்த நாளையொட்டி – வலைதளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, டிச. 27-**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் ஐயா நல்லகண்ணு அவர்களின் பிறந்தநாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், “தன்னலம் கருதா உழைப்புக்கு வாழும் சாட்சி, ஐயா நல்ல கண்ணு அவர்கள்” என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

முதல்வரின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**தியாகத்தின் பெருவாழ்வு: தோழர் நல்லகண்ணு ஐயா 101ஆவது பிறந்ததாள்.**

**விடுதலைப் போராட்ட வீரராகவும், விவசாயத் தொழிலாளர் களுக்கான போராளியாகவும் திகழ்ந்து, இன்றளவும் நமக்கு வழிகாட்டும் நூற்றாண்டு நாயகர், இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் முதுபெரும் தலைவர் ஐயா நல்லகண்ணு அவர் களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!**

**தன்னலம் கருதா உழைப்புக்கு வாழும் சாட்சியான, எண்ணற்ற இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டான தாங்கள் நல்ல உடல்நலத்துடன் நீண்டநாட்கள் நிறைவாழ்வு வாழ்ந்திட விழைகிறேன்.**

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தோழர் நல்லகண்ணு ஐயா அவர்களை தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.







இனமான பேராசிரியர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாநகர கழக அலுவலகம், மேயர் சிட்டிபாபு அரங்கில் மாநகர கழக பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் தலைமையில் மாவட்ட அவைத்தலைவர் க.நடராசன், மண்டலத்தலைவர் தம்பி ஆர்.கோவிந்தராஜ், மாநகர நிர்வாகிகள் அண்ணாநகர் அ.ராமசாமி, அ.சரவணகுமார், தேவி முருகேசன் ஆகியோர் முன்னிலையில் பேராசிரியரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் விஸ்வநாதன், வட்ட கழக செயலாளர்கள் ரத்தினசாமி உள்பட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



காந்தியடிகளின் பெயரை நீக்கி 100 நாள் வேலை வாய்ப்பை ஒழிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து தருமபுரி கிழக்கு மாவட்டம் எரியூர் பகுதியில் தர்மபுரி முன்னாள் மாவட்ட கழக பொறுப்பாளர் பி.தர்மசெல்வன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.உடன் ஒன்றிய பொறுப்பாளர்கள் கிருஷ்ணன், முத்துசாமி, மாநில நிர்வாகி சோலை மணி,மாவட்ட நிர்வாகி எம்.உமா சங்கர்,முரசொலி சின்னசாமி, பூம்புகார் சின்னசாமி, வைத்திலிங்கம்,செந்தில்குமார், லோகநாதன்,தமிழரசன்,பூபால்,தமிழ்மணி,அம்ரிஸ் உள்ளிட்ட 200 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.